பள்ளிக் கல்வித்துறை

# தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு
# ஆசிரியர்களால் அடிக்கடி கேட்கப்படும் வினாக்களும் அவற்றுக்கான விடைகளும்

உருவாக்கம்:

## மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம்
## சென்னை – 600006

## குழுத்தலைவர்

**திரு. கு. தேவராஜன்,**
இயக்குநர்,
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம்,
சென்னை 600006.

## மேலாய்வாளர்

**முனைவர் மு. பழனிச்சாமி,**
இணை இயக்குநர் (திட்டம்),
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம்,
சென்னை – 600006.

## தொகுப்பாளர்கள்

| | |
|---|---|
| **முனைவர் ஆர். ஐயப்பன்,**<br>உதவிப் பேராசிரியர்,<br>மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம், சென்னை – 600006. | **திரு. எ. முத்துக்கிருஷ்ணன்,**<br>உதவிப் பேராசிரியர்,<br>மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம், சென்னை – 600006. |
| **திருமதி க. சு. சங்கீதா,**<br>உதவிப் பேராசிரியர்,<br>மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம், சென்னை – 600006. | **முனைவர் சி. மலர்விழி,**<br>முதுநிலை விரிவுரையாளர்,<br>மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை – 600005. |
| **திருமதி D. மார்கிரேட் எமிலி,**<br>முதுநிலை விரிவுரையாளர்,<br>மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை – 600005. | **திரு. ப. மணி,**<br>விரிவுரையாளர்,<br>மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், இராணிப்பேட்டை, வேலூர் மாவட்டம். |
| **செல்வி லூ.ஷோபியா,**<br>விரிவுரையாளர்,<br>மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், களியாம்பூண்டி, காஞ்சிபுரம் மாவட்டம். | **திருமதி G. மதுசூதனா,**<br>விரிவுரையாளர்,<br>மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், இராணிப்பேட்டை, வேலூர் மாவட்டம். |

# தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு

**ஆசிரியர்களால் அடிக்கடி கேட்கப்படும்**
**ஐயவினாக்களும் விடைகளும் (FAQ)**

**1. தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு (Continuous and Comprehensive Evaluation) என்றால் என்ன ?**

தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு என்பது, கற்றல்–கற்பித்தல் நடைபெறும்போதே கல்விசார் (Scholastic) மற்றும் கல்வி இணைச்செயல்பாடுகளில் (Co-scholastic) கற்போரைத் தொடர்ந்து மதிப்பீடு செய்தலாகும்.

**2. கல்விசார் (Scholastic) செயல்பாடுகளின்கீழ் மதிப்பீடு செய்யப்படும் பாடங்கள் யாவை ?**

கல்விசார் செயல்பாடுகளின்கீழ் மதிப்பீடு செய்யப்படுபவை மொழிப்பாடம், ஆங்கிலம், கணக்கு, அறிவியல், சமூக அறிவியல் மற்றும் உடற்கல்வி ஆகியன.

**3. கல்வி இணைச்செயல்பாடுகளின்கீழ் (Co-scholastic) மதிப்பீடு செய்யப்படும் பகுதிகள் யாவை ?**

1. வாழ்க்கைத் திறன்கள்(Life skills)
2. மனப்பான்மைகளும் மதிப்புகளும்(Attitudes and Values)
3. நன்னலம், யோகா மற்றும் முழு உடற்பயிற்சி(Wellness, Yoga and Holistic Exercise)
4. பாட இணைச்செயல்பாடுகள் (Co-curricular Activities)

**4. கல்விசார் (Scholastic) செயல்பாடுகளுக்கான மதிப்பீட்டு முறைகள் என்னென்ன ?**

வளரறி மதிப்பீடு, தொகுத்தறி மதிப்பீடு ஆகிய இரண்டும் கல்விசார் செயல்பாடுகளுக்கான மதிப்பீட்டுமுறைகளாகும்.

**5. வளரறி மதிப்பீடு (Formative Assessment) என்றால் என்ன ?**

வளரறி மதிப்பீடு என்பது, மாணவர்களின் கல்விசார் செயல்பாடுகளைப் பள்ளிச்சூழலிலும் வகுப்பறையிலும் பல்வேறு கற்றல் சூழலிலும் ஆசிரியர் தொடர்ந்து மதிப்பீடு செய்வதாகும். இம்மதிப்பீடானது வளரறி மதிப்பீடு (அ), வளரறி மதிப்பீடு (ஆ) என இருவகைப்படும். இவை குறைதீர் கற்பித்தலுக்கு வழி வகுக்கும்.

**6. குறைதீர் கற்பித்தலை (Remedial Teaching) எந்நிலையில் மேற்கொள்ளுதல் வேண்டும் ?**

மாணவர்கள் வளரறி மதிப்பீட்டில் உரிய கற்றலடைவைப் பெறாதபோதும், ஒரு கருத்தைப் புரிந்தகொள்ளாதபோதும், கருத்தை விளக்கவேண்டியிருந்தாலும், கற்றலை நிலைப்படுத்த வேண்டியிருப்பினும் குறைதீர் கற்றலை மேற்கொள்ளுதல் வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் குறைகளைக் களைய பன்முறை எழுதுதல் (imposition), மனனம் செய்ய வற்புறுத்துதல், உடலாலும் மனத்தாலும் துன்புறுத்துதலை மேற்கொள்ளுதல் கூடாது.

**7. வளரறி மதிப்பீடு (அ) FA(a) என்றால் என்ன ?**

வளரறி மதிப்பீடு (அ) என்பது, மாணவர்களின் உள்ளார்ந்த திறன்களை வெளிக்கொணரவும் ஆளுமைத்திறனை அறியவும் கல்விசார் செயல்பாடுகளில் மாணவர்கள் ஈடுபடும்பொழுது, அவர்களின் தன்னார்வம், ஈடுபாடு, பங்கேற்றல், விடாமுயற்சி, ஒழுங்குமுறை முதலிய பண்புகளைப் பாட ஆசிரியர் உற்றுநோக்கி மதிப்பிடுதலாகும்.

**8. வளரறி மதிப்பீடு (ஆ) FA(b) என்றால் என்ன ?**

வளரறி மதிப்பீடு (ஆ) என்பது, கற்பித்த பாடப்பொருளில்/அலகில் மாணவர்களின் கற்றலடைவை அறிய, வாய்மொழியாகவும்/சிறு எழுத்துத் தேர்வு வாயிலாகவும் மதிப்பிடுதலாகும்.

**9. வளரறி மதிப்பீடு (அ) FA(a) மற்றும் (ஆ) FA(b) செயல்பாட்டுக்கான மதிப்பெண் எவ்வளவு ?**

வளரறி மதிப்பீடு (அ) செயல்பாட்டுக்கு 20 மதிப்பெண்களும் வளரறி மதிப்பீடு (ஆ) செயல்பாட்டுக்கு 20 மதிப்பெண்களுமாக 40 மதிப்பெண்கள் வழங்கப்பட்டுள்ளன.

**10. தொகுத்தறி மதிப்பீடு (Summative Assessment) என்றால் என்ன ?**

தொகுத்தறி மதிப்பீடு என்பது, மாணவரின் கல்விசார் கற்றலடைவை எழுத்துத் தேர்வு வாயிலாகப் பருவ இறுதியில் மதிப்பீடு செய்வதாகும். இம்மதிப்பீடு, வினாத்தாள் திட்டவரைவின்படி கற்றல் நோக்கங்களை வெளிக்கொணருமாறு அறிதல், புரிதல், பொருளறிதல், பயன்படுத்தல், பகுத்தாய்தல், மதிப்பிடுதல், படைப்பாற்றல் ஆகியவற்றின் அடிப்படையில் அமையும்.

## வளரறி மதிப்பீடு (அ) (FA(a))

**11. ஒரு பருவத்துக்கு வளரறி மதிப்பீடு (அ ) FA(a) செயல்பாடுகள் எத்தனை வழங்குதல் வேண்டும் ?**

குறைந்தது நான்கு செயல்பாடுகளை வழங்குதல் வேண்டும். அவற்றுள் சிறந்த இரண்டு செயல்பாடுகளின் மதிப்பெண்க்ளை மட்டுமே இறுதிக் கணக்கீட்டிற்கு எடுத்துக்கொள்ளுதல் வேண்டும்.

**12. வளரறி மதிப்பீடு (அ) FA(a) செயல்பாடு எவ்வாறு இருத்தல் வேண்டும் ?**

வளரறி மதிப்பீடு (அ) செயல்பாடுகள் பாடப்பொருளுக்கு ஏற்புடையதாகவும் மாணவனின் தனித்திறனை வளர்ப்பதாகவும் உள்ளார்ந்த திறனை வெளிக்கொணர்வதாகவும் கற்றலை நிலை நிறுத்துவதாகவும் இருத்தல் இன்றியமையாதது.

**13. வளரறி மதிப்பீடு (அ)வை (FA(a)) எவ்வாறெல்லாம் வடிவமைக்கலாம் ?**

பாடப்பொருளின் தன்மைக்கேற்பவும், மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்பவும், மாணவர்கள் ஆர்வத்துடன் ஈடுபடுமாறும், செயல்பாட்டை உரிய நேரத்தில் செய்து முடிக்குமாறும், மதிப்பீட்டுக் கூறுகளை உள்ளடக்கியவாறும் எளிய, செலவில்லாத, உள்ளூர் வளங்களைப் பயன்படுத்திச் செய்வதாகவும் நடைமுறை வாழ்க்கைக்கு ஏற்றதாகவும் வடிவமைக்கலாம்.

**14. வளரறி மதிப்பீடு (அ)வை (FA(a)) எந்தெந்த நிலையில் செயல்படுத்தலாம் ?**

கற்றல் நிலையில், வலுவூட்டல் நிலையில், மதிப்பீட்டு நிலையில் வளரறி மதிப்பீடு (அ) செயல்பாட்டைச் செய்யலாம். ஆனால், பதிவு செய்யும் செயல்பாடானது 10 மதிப்பெண்களுக்குப் பொருத்தமுடையதாகவும், பாடப்பொருள் சார்ந்ததாகவும் மாணவர்களின் உள்ளார்ந்த திறன்களை வெளிக்கொணர்வதாகவும் இருத்தல் வேண்டும்.

**15. ஒரு செயல்பாட்டுக்கான (Activity) நேரம் எவ்வளவு ?**

செயல்பாட்டுக்கான நேரம் அந்தந்தச் செயல்பாட்டைப் பொருத்து அமையும். ஆனால், குறைந்தது ஐந்து நிமிடங்கள்முதல் பதினைந்து நிமிடங்கள் வரை உள்ளவாறு செயல்பாட்டினை அமைத்துக் கொள்ளலாம். மேலும், கருத்தாடல்கள், ஒப்படைப்புகள், செயல் திட்டங்கள், வீட்டுப்பாடச் செயல்கள், செய்திகள் திரட்டுதல், களப்பணி முதலியவற்றுக்கு ஏற்ப நேரத்தை ஒதுக்கீடு செய்துகொள்ளுதல் வேண்டும்.

**16. செயல்பாடுகளைச் செய்வதற்கு மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்ட என்ன செய்யலாம் ?**

மாணவர்களின் திறன்கள், ஆர்வம், ஈடுபாடு, முன்னனுபவம் முதலியவற்றை ஆசிரியர் உற்றுநோக்கி, அவர்களுக்கேற்ற செயல்பாடுகளை வடிவமைத்து வழங்குதல் வேண்டும். மாணவர்களையே செயல்பாடுகளை வடிவமைக்கவும், செயல்பாடுகளைத் தெரிவுசெய்துகொள்ளவும் உரிமை அளிக்கும்போது, அவர்கள் ஆர்வத்துடன் செயல்பாடுகளில் ஈடுபடுவர். மாணவர்களின்மீது விருப்பமில்லாச் செயல்பாடுகளைத் திணித்தல் கூடாது.

**17. ஒவ்வொரு பாடத்திற்கும் எத்தனை வளரறி மதிப்பீடு (அ) (FA(a)) செயல்பாடுகளைக் கொடுக்கலாம் ?**

பாடப்பொருளுக்கேற்பவும் கற்றலை நிலைநிறுத்துவதற்கு ஏற்பவும் மாணவர் கற்றல் விரைவுத் தன்மைக்கேற்பவும் ஆசிரியரின் சிந்தனைத்திறனுக்கு ஏற்பவும் தேவைக்கேற்பச் செயல்பாடுகளை எத்தனை வேண்டுமானாலும் வடிவமைத்துக் கொள்ளலாம்.

**18. வளரறி நிலையில் கொடுக்கப்பட்ட அனைத்துச் செயல்களையும் பதிவு செய்தல் வேண்டுமா ?**

ஆசிரியர் விரும்பினால் அனைத்துச் செயல்களையும் தன் குறிப்பேட்டில் குறித்துக்கொள்ளலாம். நான்கு செயல்பாடுகளை மட்டும் பதிவு செய்தால் போதுமானது. அவற்றுள் இரண்டனை மட்டும் மதிப்பீட்டுக்கு எடுத்துக்கொள்ளுதல் வேண்டும்.

**19. ஒரு பாடத் தலைப்பில் கற்பித்தபின்தான் வளரறி மதிப்பீடு (அ) FA(a) செயல்பாடுகளைக் கொடுக்க வேண்டுமா ?**

அப்படியில்லை. கற்பிக்கும்போதே பாடக்கருத்தை விளங்கிக்கொள்ளுமாறும் செயல்பாட்டை வடிவமைத்துத் தரலாம். பாட இறுதியில் வலுவூட்டலுக்காகவும், அப்பாடப்பொருள் சார்ந்தும், பாடப்பொருளின் தொடர்ச்சியாகவும், நடைமுறை வாழ்க்கையோடு தொடர்புபடுத்தியும் செயல்பாட்டை வடிவமைத்துத் தரலாம்.

**20. வளரறி மதிப்பீடு (அ) FA(a) செயல்பாடுகள் பாடம் சார்ந்ததாகத்தான் இருத்தல் வேண்டுமா ?**

பாடப்பொருளைச் சார்ந்ததாகவே இருத்தல் வேண்டும். ஆனால், ஆசிரியரின் அணுகுமுறையும் மாணவர்தம் திறனுக்கேற்பவும் நடைமுறை வாழ்க்கையோடு தொடர்புபடுத்திச் செயல்பாட்டை வடிவமைக்கலாம். பாடப்பொருளை விட்டுவிலகி மதிப்பீடு செய்வதாய் அமைதல் கூடாது.

**21. வளரறி மதிப்பீடு (அ) FA(a) செயல்பாடானது, அனைத்து மாணவர்களுக்கும் ஒரே மாதிரியாகத்தான் ( Uniform) இருத்தல் வேண்டுமா ?**

தேவையில்லை. தனியாள் செயல்பாடு, இருவர் செயல்பாடு, குழுச்செயல்பாடு, வகுப்பு முழுமைக்குமான செயல்பாடு போன்றவற்றை வடிவமைத்து, மாணவரின் திறனுக்கு ஏற்றவாறு வழங்கலாம்.

**22. வளரறி மதிப்பீடு (அ) FA(a) வாய்மொழிச் செயல்பாடாகத்தான் இருத்தல் வேண்டுமா ? எழுதுதல் முறையில் இருத்தல் வேண்டுமா ?**

இருவகையிலும் செயல்பாடுகளை வடிவமைக்கலாம்.

**23. முன்னறிவைக் கண்டறியக் கேட்கப்படும் வினாக்களை வளரறி மதிப்பீடு(அ) FA(a)வாக எடுத்துக்கொள்ளலாமா ?**

அவ்வாறு கொள்ளுதல் கூடாது. பாடம்சார்ந்த முன்னறிவைக் கண்டறிய வாய்மொழியாகக் கேட்கப்படும் வினாக்கள்/செயல்பாடுகள், மாணவர்களின் நினைவாற்றலைக் கண்டறிவதாக அமையும்.

**24. பொருளறிதல் வினாக்கள் (Comprehension Questions) வளரறி மதிப்பீடு (ஆ)வின்கீழ் வருமா ?**

வரும். ஏனெனில், பொருளறி வினாக்கள் மாணவர்களின் அறிவுசார்ந்த திறனை மதிப்பிடுவதாகும்.

**25. மனவரைபடம் (Mind Map), தொகுத்தல் ஆகிய செயல்பாடுகளை வளரறி மதிப்பீடு (அ)வுக்கு எடுத்துக்கொள்ளலாமா ?**

மாணவனின் சிந்தனையைத் தூண்டுவதாகவும் உள்ளார்ந்த ஆற்றலை வெளிக்கொணர்வதாகவும் அமையும் மனவரைபடத்தை வளரறி மதிப்பீடு (அ)வுக்கு எடுத்துக்கொள்ளலாம்.

**26. தகவல் தொழில் நுட்பத்தை (Information Communication Technology - ICT) வளரறி மதிப்பீடு (அ) செயல்பாடாக அமைக்கலாமா ?**

அமைக்கலாம். தகவல் தொழில் நுட்பத்தைக் கற்பித்தல் செயல்பாடுகளுக்குப் பயன்படுத்துவது மாணவனின் கற்றலைத் தூண்டும்.

**27. ஒரு பருவத்துக்கு, ஒரு பாடத்திற்கு எத்தனை செயல்திட்டங்களை வழங்குதல் வேண்டும் ?**

ஒரு பருவத்துக்கு, ஒரு பாடத்துக்கு (Subject), ஒரு செயல்திட்டம் (Project) மட்டுமே வழங்குதல் வேண்டும். ஆசிரியர்கள் அனைத்துப் பாடங்களுக்கும் (Lessons) அனைத்துப் பருவங்களுக்கும் வழங்கி மாணவர்களுக்குச் சுமையைக் கூட்டுதல் கூடாது. அச்செயல்திட்டங்களும் பெரும் பொருட்செலவு ஏற்படுத்துவதாக அமைதல் கூடாது. செயல்திட்டம் அனைத்து மாணவர்களுக்கும் ஒன்றுபோலவே இருத்தல் கூடாது. மாணவர்கள் விரும்புமாறும் மாணவர்களாலேயே செய்யக்கூடியதாகவும் உள்ளூர் வளங்களைப் பயன்படுத்திச் செய்வதாகவும் இருத்தல் இன்றியமையாதது. எக்காரணத்தைக்கொண்டும் கடைகளில் வாங்கி வைப்பதாகச்

செயல்திட்டம் அமைதல் கூடாது. மேலும், செயல்திட்டங்களை மாணவர்களே செய்யுமாறு வழங்க வேண்டுமேயன்றிப் பெற்றோர் செய்து தருவதாக அமைத்தல் கூடாது.

**28. மொழிப்பாடங்களில் அனைத்துத் திறன்களையும் (கேட்டல் - Listening, பேசுதல் – Speaking, படித்தல் – Reading, எழுதுதல் – Writing) மதிப்பீடு செய்தல் வேண்டுமா ?**

ஆம். ஒவ்வொரு திறனின் வளர்நிலைகளையும் உற்றுநோக்குவதும் மதிப்பிடுவதும் ஆசிரியரின் கடமை. அப்பொழுதுதான் எத்திறனில் மாணவர் பின்தங்கியுள்ளாரோ அத்திறனை மேம்படுத்த இயலும்.

**29. எழுதவும் படிக்கவும் தெரியாத மாணவர்களுக்கு எத்தகைய செயல்பாடுகளை வழங்குவது ?**

இத்தகைய மாணவர்கள் மிகக் குறைவாக ஒரு வகுப்பில் இருப்பர். அவர்களுக்கு எழுதுதல், படித்தல் செயல்பாடுகளுக்கு முன்னுரிமை கொடுத்தல் வேண்டும். அவர்கள்மீது சிறப்புக் கவனம் செலுத்திக் கற்பித்துக் கற்றலை மேம்படுத்துதல் வேண்டும். எழுதவும் படிக்கவும் அறிந்தபின்னரே அவர்களுக்குப் பிற செயல்பாடுகளை வழங்குதல் வேண்டும். இல்லையெனில், அச்செயல்பாடுகளால் அவர்களுக்கு யாதொரு பயனும் ஏற்படாது. படித்தல், எழுதுதலில் முழுமையான திறன் பெறும்வரை பிற செயல்பாடுகளை வழங்கலாம். (சான்றாகக் கதைகூறுதல், பாடுதல், வரைதல் இன்னபிற)

**30. வளரறி மதிப்பீடு (அ) FA(a) செயல்பாடுகளை நாள்தோறும் தருதல் வேண்டுமா ?**

தேவையில்லை. ஆனால் பாடப்பொருள், கடினப்பகுதி, கருத்துத் தெளிவு, கற்றல் நிலைபேறு ஆகியவற்றை ஆசிரியர் கருத்திற்கொண்டு தேவைக்கேற்பச் செயல்பாடுகளை வடிவமைத்தல் வேண்டும்.

**31. ஏதேனும் ஒருபாடத்தில் வளரறி மதிப்பீடு (அ) FA(a) செயல்பாடு கொடுக்க இயலாத நிலை ஏற்படுமா ?**

பாடங்கள் அனைத்தும் கருத்து அடிப்படையிலும் பொருள் அடிப்படையிலும் எழுதப்பட்டுள்ளதனால், செயல்பாடுகள் அமைக்க இயலாத நிலை ஏற்பட வாய்ப்பில்லை.

**32. ஒரு பருவத்திற்கு வளரறிச் செயல்பாடு (அ) FA(a) குறைந்த அளவு நான்கு போதும் என்பதனால், சில பாடங்களில் வளரறி மதிப்பீடு விடுபட்டுப் போக வாய்ப்பு உள்ளதா ?**

வாய்ப்பு இல்லை. ஏனெனில், கற்றல் நடைபெறும்பொழுதெல்லாம் செயல்பாடுகளும் மதிப்பீடுகளும் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டே இருப்பதனால், பாடப்பொருள் விடுபட வாய்ப்பு இல்லை.

**33. வளரறி மதிப்பீடு (அ) FA(a) செயல்பாடு கொடுக்கப்பட்ட நேரத்தில் ஒரு மாணவன் பள்ளிக்கு வரவில்லையென்றால், அம்மாணவன் மீண்டும் பள்ளிக்கு வரும்போது ஏற்கெனவே மற்ற மாணவர்கள் செய்த செயல்பாட்டைச் செய்ய வேண்டுமா ?**

தேவையில்லை. செயல்பாடுகள் அனைத்தும் அனைவருக்கம் பொதுவானதாக அமைய வாய்ப்புகள் குறைவு. பள்ளிக்கு வராத நாளன்று கற்பித்த பாடப்பொருளில் அம்மாணவன் திறன்பெற வேண்டுமானால், உடன்பயிலும் மாணவர்களுடன் இணைந்து அச் செயல்பாட்டை மேற்கொள்ளலாம்.

**34. வளரறி மதிப்பீடு (அ) FA(a) செயல்பாடுகளில் களப்பணி, செயல்திட்டம் செய்வதற்குப் பள்ளிநேரத்தில் மாணவர்களை வெளியில் அனுப்பலாமா ?**

அனுப்பலாம். ஆனால், அவர்களுடன் ஓர் ஆசிரியர் கண்டிப்பாகத், தலைமையாசிரியரின் முன் அனுமதியுடன் செல்லுதல் வேண்டும்.

**35. வளரறி மதிப்பீடு (அ) FA(a)வுக்குப் பல விடைகள் வருமெனவும், வளரறி மதிப்பீடு (ஆ)வுக்கு ஒரே விடை வருமெனவும் கூறுவது முறையா ?**

அவ்வாறு கொள்ளுதல் கூடாது. வளரறி மதிப்பீடு (அ) என்பது செயல்பாடுகளுக்கானது. வளரறி மதிப்பீடு (ஆ) என்பது கற்றலடைவை மதிப்பிடுவதற்கானது.

## வளரறி மதிப்பீடு (ஆ) FA(b)

**36. வளரறி மதிப்பீடு (ஆ) FA(b) செயல்பாடுகளை நாள்தோறும் தருதல் வேண்டுமா ?**

தேவையில்லை. பாடப்பகுதியைக் கற்பிக்கும்பொழுதும், கற்பித்தபின்னும் கற்றலடைவை அறிய சிறுமதிப்பீடு செய்தால் போதுமானது.

**37. வளரறி மதிப்பீடு (ஆ) FA(b) ஒரு பருவத்திற்கு எத்தனை வழங்குதல் வேண்டும் ?**

ஒரு பருவத்திற்குக் குறைந்தது நான்கு கற்றலடைவுச் சிறு மதிப்பீட்டுத் தேர்வுகள் வழங்குதல் வேண்டும்.

**38. வளரறி மதிப்பீடு (ஆ)வை (FA(b)) எந்தெந்த நிலையில் செய்யலாம் ?**

கற்றல் நிலையில், வலுவூட்டல் நிலையில், மதிப்பீட்டு நிலையில் பாடப்பொருள் கருத்தை மாணவர்கள் கற்றுக்கொண்டனரா என்பதனை அறிய, வளரறி மதிப்பீடு (ஆ) செயல்பாட்டை மேற்கொள்ளலாம். இத்தேர்வானது, பத்து மதிப்பெண்கள் அமையுமாறு புறவய வினாக்கள் (Objective Question ) மற்றும் சிறு, குறு வினாக்களாகவும் அமைக்கலாம்.

**39. ஒரு பாடப்பகுதியைக் கற்பித்தபின்தான் வளரறி மதிப்பீடு (ஆ) FA(b) செயல்பாட்டைக் கொடுக்க வேண்டுமா ?**

குறிப்பிட்ட பாடத் தலைப்பில் ஓர் அலகு/பாடக்கருத்து/ ஒரு பகுதியைக் கற்பித்தபின் சிறு எழுத்துத் தேர்வை (FA(b) செயல்பாட்டை மேற்கொள்ளலாம்.

**40. வளரறி மதிப்பீடு (ஆ) FA(b)வில் ஒரே பாடத்தலைப்பின்கீழ்தான் வினாக்கள் கேட்கப்பட வேண்டுமா ?**

ஆம். கற்பித்த பகுதி/ ஒரு கருத்து/ பாடப்பொருளின் தலைப்பு ஆகியவற்றுக்குப் பொருத்தமான புறவய வினாக்களைத் தொடக்க வகுப்புகளுக்கும், அத்துடன் ஓரிரு வரிகளில் விடைவருமாறு சிறு வினாக்களை உயர்தொடக்க வகுப்புகளுக்கும் கேட்கலாம். தொடக்க வகுப்புகளுக்கு 25 சொற்களில் விடைவருமாறும், உயர்தொடக்க வகுப்புகளுக்கு 50 சொற்களில் விடைவருமாறும் சிறு வினாக்களை அமைக்கலாம்.

**41. வளரறி மதிப்பீடு (ஆ) FA(b) செயல்பாடு புறவிய வினாக்களை (Objective Questions) மட்டுமே கொண்டதா ?**

தொடக்க வகுப்புகளுக்குப் புறவய வினாக்களையும், உயர்தொடக்க வகுப்புகளுக்குப் புறவய வினாக்களுடன் ஓரிரு வரிகளில் விடைவருமாறு வினாக்களையும் அமைத்தல் வேண்டும்.

**42. வளரறி மதிப்பீடு (ஆ) FA(b) எழுத்துத் தேர்வாகத்தான் இருத்தல் வேண்டுமா ?**

தொடக்க வகுப்புகளுக்கு வாய்மொழியாகவும் எழுத்து வடிவாகவும் இருக்கலாம். உயர்தொடக்க வகுப்புகளுக்கு எழுத்துத் தேர்வாக அமைத்தல் வேண்டும்.

**43. வளரறி மதிப்பீடு (ஆ) FA(b)வில் வாய்மொழித் தேர்வு நடத்தலாமா ?**

நடத்தலாம். முதலிரண்டு வகுப்புகளுக்கு வாய்மொழித் தேர்வே சிறந்தது; எழுத்துத் தேர்வைக் குறைந்த மதிப்பெண்களுக்கு வைத்துக் கொள்ளலாம். பிற வகுப்புகளுக்கும் வாய்மொழித் தேர்வு வைத்துக்கொள்வதில் தவறில்லை.

**44. வளரறி மதிப்பீடு (ஆ) FA(b) வில் எத்தனை வினாக்கள் கேட்டல் வேண்டும் ?**

பத்து மதிப்பெண்ணுக்கு உரியவாறு வினாக்களைக் கேட்டல் வேண்டும்.

**45. வளரறி மதிப்பீடு (ஆ) FA(b) செயல்பாடானது, அனைத்து மாணவர்களுக்கும் ஒரே மாதிரியாகத்தான் இருக்க வேண்டுமா ?**

ஆம். இம் மதிப்பீடு கற்றலடைவுச் சிறு தேர்வாகவும் 10 மதிப்பெண்களுக்குரியதாகவும் கால அளவில் நெகிழ்வுத்தன்மை உடையதாகவும் அமைத்தல் வேண்டும்.

**46. வளரறி மதிப்பீடு (ஆ) FA(b) கற்றலடைவுச் சிறு மதிப்பீட்டில் குறைவான மதிப்பெண் பெறும் மாணவர்களை எவ்வாறு மேம்படுத்துவது ?**

குறைதீர் கற்பித்தலை மேற்கொள்ளுதல் வேண்டும். மீண்டும் கற்றலடைவுச் சிறுதேர்வு நடத்திக் கற்றலடைவைச் சோதித்தறிதல் வேண்டும்.

**47. கல்விசார் மதிப்பீட்டின்கீழ் உள்ளடக்கிய பாடங்கள் யாவை ?**

கல்விசார் மதிப்பீட்டின்கீழ் தமிழ், ஆங்கிலம், கணக்கு, அறிவியல், சமூக அறிவியல், மற்றும் உடற்கல்வி ஆகியன.

## கல்விசார் மதிப்பீடு (Scholastic Assessment)

**48. கல்விசார் (Scholastic) செயல்பாடுகளின்கீழ் உள்ள உடற்கல்வியையும் மற்றப் பாடங்களைப் போலவே (தமிழ், ஆங்கிலம், கணக்கு, அறிவியல், சமூக அறிவியல்) மதிப்பீடு செய்ய வேண்டுமா ?**

இல்லை. உடல்தகுதி, விளையாட்டு வீரருக்குரிய தன்மைகள், விளையாட்டு விதிகளைப் பின்பற்றுதல், விளையாட்டில் மாணவர் காட்டும் ஆர்வம், தடகளச் செயல்பாடுகள் மற்றும் விளையாட்டுகளில் தனித்திறமை ஆகியவற்றின் அடிப்படையில் பருவம் முழுவதும் உற்றுநோக்கி

மதிப்பிட்டு, கல்வி இணைச்செயல்பாடுகளுக்கு வழங்குவதுபோல் A/B/C/D/E ஆகியவற்றுள் உரிய தரநிலையை வழங்குதல் வேண்டும்.

**49. எதன் அடிப்படையில் ஒரு மாணவருக்கு உடற்கல்வியில் (Physical Education) தரக்குறியீடு வழங்கப்படுகிறது ?**

தரநிலையில் குறித்துள்ள ஐந்து தன்மைகளையும் மாணவர் பெற்றிருத்தால் ‘A’ தரநிலையும், நான்கு தன்மைகள் பெற்றிருந்தால் ‘B’ தரநிலையும், மூன்று தன்மைகள் பெற்றிருந்தால் ‘C’தரநிலையும், இரு தன்மைகள் பெற்றிருந்தால் ‘D’ தரநிலையும், ஒரு தன்மை பெற்றிருந்தால் ‘E’ தரநிலையும் வழங்கப்படுகிறது.

**50. உடற்கல்விப் பாடத்திற்குப் (Physcial Education) பாடவேளைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதா ? ஆம் எனில், எத்தனை பாடவேளைகள் ?**

ஆம். வாரத்திற்கு இரண்டு பாடவேளைகள். தொடக்க வகுப்புகளுக்கு ‘ஓடி விளையாடு பாப்பா’ வேளையிலும், உயர்தொடக்க வகுப்புகளுக்கு ஒதுக்கப்பட்ட இரண்டு பாடவேளைகளிலும் விளையாடலாம்.

## கல்வி இணைச் செயல்பாடுகள் (Co-curricular Activities)

**51. மாணவர்களிடையே வளர்க்க வேண்டிய வாழ்க்கைத் திறன்கள் (Life skills) யாவை ?**

- தன்னை அறிதல் (Self-awareness)
- துணிந்துரைத்தல் & மறுக்கும் திறன் (Assertion & Refusal skill)
- பகுத்தறியும் திறன் (Rational Thinking Skill)
- சிறப்பாகத் தொடர்புகொள்ளும் திறன் (Communication Skill)
- குழுச் செயல்கள் (Team work)

**52. மறுத்துரைக்கும் திறன் (Refusal Skill) என்றால் என்ன ?**

தனிமனித சுதந்திரத்தையும் நம்பிக்கையையும் உடலுக்கும் மனத்துக்கும் ஊறு விளைவிக்கும் எந்த ஒரு செயலையும் துணிந்து மறுக்கும் ஆற்றலை மறுத்துரைக்கும் திறன் எனலாம்.

**53. மறுத்துரைக்கும் திறனை (Refusal Skill) மதிப்பிடுவது எவ்வாறு ?**

அ) எந்தச் சூழ்லிலும் தனக்கு உடன்பாடு இல்லாத செயல்களை உறுதியோடு மறுத்தல்

ஆ) தகுந்த காரணங்களின்றித் தனது சொந்தக்கருத்தினைப் பிறருக்காக மாற்றிக் கொள்ளாதிருத்தல்

இ) தவறான எண்ணத்தில் கூறப்படும் சொற்களையும் செயல்களையும் மனவுறுதியோடு எதிர்த்தல்

இவ்வாறு மாணவர்கள் தாங்கள் எதிர்கொள்ளும் ஒவ்வாத சூழல்களையும் கருத்துகளையும் மனவுறுதியோடு மறுக்கிறார்களா எனப் பருவம் முழுவதும் உற்றுநோக்கி மதிப்பீடு செய்தல் வேண்டும்

**54. தொடக்கப்பள்ளி மாணவர்களுக்கான மனப்பான்மைகளும் மதிப்புகளும் (Attitudes and Values) யாவை ?**

அ) தேசிய மற்றும் மாநிலச் சின்னங்களை மதித்து மரியாதை அளித்தல்

ஆ) பண்புடைமையுடன் நடத்தல்

இ) பள்ளி மற்றும் சமுதாயப் பொது உடைமைகளைப் பாதுகாத்தல்

ஈ) அனைத்து உயிரிகளிடம் அன்பும் பரிவும் காட்டுதல், உயிரிகள் வாழ உதவுதல்

உ) எச்சூழலிலும் பாதுகாப்புடன் நடந்துகொள்ளுதல், சாலை விதிகளைப் பின்பற்றுதல்

**55. தேசிய மற்றும் மாநிலச் சின்னங்களுக்கு மதிப்பளித்தலை (Respect for the Values of National/ State Symbols) மதிப்பீடு செய்வது எவ்வாறு ?**

அ) தேசிய மற்றும் மாநிலச் சின்னங்கள் எவையென அறிந்துகொள்ளுதல்

ஆ) அவற்றின் தனித்தன்மைகளையும் சிறப்புகளையும் புரிந்துகொள்ளுதல்

இ) தேசிய விழாக்களில் கலந்துகொள்ளுதல்

ஈ) நாட்டுப்பண்ணையும் தமிழ்த்தாய் வாழ்த்தையும் ஒழுங்காகவும் மனமகிழ்ச்சியுடன் பாடுதல்

உ) இந்தியன் என்னும் உணர்வு வெளிப்படுமாறு நடந்தகொள்ளுதல்

இவற்றைப் பின்பற்றி மாணவர்கள் நடந்துகொள்கின்றனரா என நாளும் உற்றுநோக்குவதோடு ஆசிரியர் தம் பட்டறிவைக்கொண்டும் மதிப்பீடு செய்தல் வேண்டும்.

**56. பண்புடன் பழகுதலை (Courteousness) மதிப்பீடு செய்வது எவ்வாறு ?**

கீழுள்ள கூறுகளைப் பின்பற்றி மதிப்பீடு செய்தல் வேண்டும்.

அ) எப்போதும் பிறர் விரும்புமாறும், யாருக்கும் தீங்கு நினைக்காமலும் பொருத்தமான பண்புகளுடன் நடந்துகொள்ளுதல்

ஆ) அனைவருக்கும் மரியாதை அளித்துப் பேசுதல், பழகுதல்

இ) உடன்பயிலும் மாணவர்களுடன் இணக்கமாகவும் அவர்களுக்கு உற்றபொழுதில் உதவுபவராகவும் இருத்தல்.

ஈ) வகுப்பிலும் சமூகத்திலும் நன்னடத்தையையே வெளிப்படுத்துதல்

உ) சினம் எழும்போதும் அதனை வெளிப்படுத்தாது பண்புடன் பேசுதல், பழகுதல்

ஆசிரியர் என்பவர் மதிப்பெண்களைப் பெறும் மாணவர்களை உருவாக்குவதனைவிடப் பண்புமிக்க மாணவர்களை உருவாக்குவதிலேயே அக்கறை செலுத்துதல் வேண்டும்.

**57. அரசியலமைப்புச் சட்டவிதிகளைப் பின்பற்றுதல் (Upholds Constitutional ideals) என்னும் பண்பை மதிப்பீடு செய்வது எவ்வாறு ?**

இப்பண்பைப் பின்வரும் கூறுகளின் அடிப்படையில் மதிப்பீடு செய்தல் வேண்டும்.

அ) ஒவ்வொருவரும் தத்தமக்குரிய அடிப்படை உரிமைகளையும் கடமைகளையும் அறிந்திருத்தல் இன்றியமையாதது.

ஆ) குழந்தைகளுக்கான சிறப்புரிமைகள் அறிந்திருத்தல்

இ) மொழி, மதம், இனம், பாலினம் சார்ந்த தாக்கங்களுக்கு ஆட்படாமல் இருக்கும் விழிப்புணர்வைப் பெற்றிருத்தல்

ஈ) அமைதி, ஒற்றுமை ஆகியவை திகழுமாறு தாம் வாழும் சூழலைப் பார்த்துக்கொள்ளுதல்.

**58. பள்ளி மற்றும் பொதுச்சொத்துகளைப் பாதுகாத்தல் (Respect for School/ Community Property) என்பதனை மதிப்பீடு செய்வது எவ்வாறு ?**

அ) வகுப்பறை இருக்கைகள், பள்ளித் தளவாடப்பொருள்கள், சுவர்கள் முதலியவற்றைச் சிதைக்காமல், பாழ்படுத்தாமல் இருத்தல்.

ஆ) பேருந்துகள், அறிவிப்புப் பலகைகள், சாலைக்குறியீடுகள், ஊர்ப்பொதுவிடங்கள், பொது இடங்களிலுள்ள பொருள்கள் (பேருந்துநிலையம், தொடர்வண்டிநிலையம், வங்கிகள், அஞ்சலகம், கழிவறைகள் இன்னபிற) எனப் பொதுச்சொத்துகளைச் சிதைக்காமல், கிறுக்காமல், பாழாக்காமல் நடந்துகொள்ளுதல்

இ) மனம்போன போக்கில் வன்முறையில் ஈடுபட்டு ஊர் மற்றும் பொதுச்சொத்துகளைப் பாழாக்காமல் இருத்தல்

ஈ) மின்பொருள்களைத் தேவைப்படும்பொழுது மட்டும் பயன்படுத்துதல்

உ) பிறரால் ஏற்படும் கலை, பண்பாட்டுச் சீரழிவுகளைத் தடுத்தல்

ஊ) பொதுச்சொத்துகளைப் பாதுகாக்கும் குழுவில் இணைந்து பணியாற்றுதல்

பள்ளி, பொதுச்சொத்துகளைப் பாழாக்கும் மாணவர்களைக் கண்டறிந்து அறிவுறுத்திப் பண்புமிக்கவர்களாக உருவாக்குதல் வேண்டும். அவர்கள் தீச்செயல்களில் ஈடுபடுவதனைப் பார்த்து, அப்படியே மதிப்பீடு செய்தல் கூடாது. அவ்வப்பொழுது அவர்களைத் திருத்தியும் மன அளவில் பண்படுத்தியும் நல்லொழுக்கமிக்கவர்களாக உருவாக்குதல் வேண்டும். இக்கூறுகளை மனத்திற்கொண்டும் உற்றுநோக்கியும் மாணவர்களை மதிப்பீடு செய்தல் வேண்டும்.

**59. சுற்றுச்சூழல் பாதுகாப்புப் பண்பை (Environment Values) மதிப்பீடு செய்வது எவ்வாறு ?**

பள்ளிகளில் மாணவர்கள் பயன்படுத்தும் பொருள்கள் சுற்றுச்சூழலுக்கு ஏற்றவையா எனக் கண்டறிந்து, ஒவ்வாதனவற்றைப் பற்றி அறிவுறுத்தி, அவற்றின் பயன்பாட்டைத் தவிர்க்கச் செய்தல். எவை எவை சுற்றுச்சூழலைக் கெடுக்கும் என்பதனைப் பாடப்பொருளிலேயே கற்பித்து, அக்கருத்துகளைப் பின்பற்றச் செய்தல். மேலும் வளங்களைச் சிக்கனமாகப் பயன்படுத்துதல், மறுபயன்பாடு, மறுசுழற்சி பற்றி அறிதல், புவியைப் பாதுகாக்க வேண்டியதன் இன்றியமையாமை, மாசுகளால் ஏற்படும் தீங்குகளை அறியச் செய்தல், சுற்றுப்புற மேம்பாட்டில் ஈடுபடுத்துதல், சுற்றுச்சூழல் பாதுகாப்பதன் தேவையை மக்களிடம் பரப்புதல் முதலியனவற்றை மாணவர்கள் பின்பற்றும்படி கூறுதல்.

அவற்றையெல்லாம் நடைமுறையில் பின்பற்றுகிறார்களா என உற்றுநோக்கி, மதிப்பீடு செய்தல் வேண்டும்.

**60. எல்லாவற்றிலும் தன்னைச் சிறப்பாக்கிக் கொள்ளும் பண்பை ( Pursuit of Excellence) மதிப்பீடு செய்வது எவ்வாறு ?**

அ) மாணவன் தெளிவான இலக்கைக் கொண்டிருத்தல்

ஆ) தன்னுடைய திறன், திறனின்மைபற்றி அறிந்திருத்தல்

இ) விடாமுயற்சியுடன் ஒரு செயலில் ஈடுபடும் மனப்பான்மை

ஈ) எதிர்வரும் தடைகளைத் திறமையாக எதிர்கொள்ளுதல்

உ) தன்னுடைய செயலைப் பற்றிப் பிறர்கூறும் கருத்துகளை உள்வாங்கிக்கொண்டு தேவையானவற்றை மற்றும் எடுத்துக்கொண்டு முன்னேறிச் செல்லுதல்

மேற்கூறிய கூறுகளின் அடிப்படையில் மாணவரின் பண்புகளை உற்றுநோக்கி மதிப்பீடு செய்தல் வேண்டும்.

**61. சாலை மற்றும் பாதுகாப்பு விதிகளைக் கடைப்பிடித்தல் ( Compliance of Safety and Traffic Rules) பண்புகளை மதிப்பீடு செய்வது எவ்வாறு ?**

பாடநூல்களில் இடம்பெற்றுள்ள சாலை மற்றும் பாதுகாப்பு விதிகளை அறிந்து, அவற்றை நடைமுறை வாழ்க்கையில் பின்பற்றும்படி மாணவர்களுக்கு அறிவுரையும் வழிகாட்டுதலும் செய்தல் ஆசிரியர்தம் கடமையாகும். களப்பணி, முதலுதவி, செயல்திட்டம், ஒப்படைப்புப் போன்றவற்றைக் கொடுக்கும்போது, இப்பண்புகளை உணர்ந்து பின்பற்றுமாறு அவற்றைத் தருதல் வேண்டும்.

இப்பண்புகளைச் செயல்பாடுகளின்போதும், பள்ளி நிகழ்வுகளின்போதும், சாலைகளைக் கடக்கும்போதும் ஆசிரியர் உற்றுநோக்கி, விதிகளைக் கடைப்பிடிக்காதவர்களுக்கு அறிவுரை கூறிப் பின்பற்றச் செய்தல் வேண்டும்.

இச்சூழல்களில் மாணவர்களின் நடத்தைகளைப் பின்பற்றி மதிப்பீடு செய்தல் வேண்டும்.

**62. மதிப்புக்கல்வியை (Value Education) மாணவர்களிடம் வளர்ப்பது எவ்வாறு ?**

மொழிப்பாடங்கள், சமூக அறிவியல் பாடங்களில் மாணவர்களுக்கு மதிப்புக்கல்வியைக் கற்பிக்க வாய்ப்புகள் மிகுதி. அவற்றைக் கற்பிக்கும்போதே மதிப்புகள், நற்பண்புகள், நன்னடத்தைகள், நற்குணங்கள் முதலியவற்றை இணைத்துக் கற்பித்து ஒழுக்கத்தை மேம்படுத்துதல் வேண்டும். ஆசிரியர்கள் பாடப்பொருளைக் கற்பிக்கும்போது வாய்ப்புக் கிடைக்கும்போதெல்லாம் மதிப்புக் கல்விக் கூறுகளைக் கற்பித்தல் வேண்டும்.

**63. நன்னலம்(Wellness), யோகா (Yoga) மற்றும் முழு உடற்பயிற்சியைக் (Holistic Exercise) கற்பிப்பது யார் ?**

தொடக்கப் பள்ளியாசிரியர்களில், அவ்வகுப்பாசிரியரே நன்னலம், யோகா மற்றும் முழு உடற்பயிற்சியைக் கற்பிப்பார்.

உயர்தொடக்க வகுப்புகளில் உடற்கல்வி ஆசிரியர் கற்பிப்பார். அவர் இல்லாத நிலையில் தலைமையாசிரியர், பொறுப்பான ஓர் ஆசிரியர் வாயிலாக இவற்றைக் கற்பிக்கச் செய்வார்.

**64. நன்னலம்(Wellness), யோகா (Yoga) மற்றும் முழு உடற்பயிற்சியை(Holistic Exercise) எப்பொழுது மதிப்பீடு செய்வது ?**

இவற்றைக் கற்பிக்க பொறுப்பேற்றுள்ள ஆசிரியர், அவற்றைக் கற்பிக்கும் நேரத்தில் மதிப்பீடு செய்வார்.

**65. யோகா (Yoga) வகுப்பைப் பள்ளியில் யார் நடத்துவது ?**

பள்ளியில் பணியாற்றும் ஆசிரியர்களில் யோகக்கலையில் பயிற்சி பெற்றவர்களும் உடற்கல்வி ஆசிரியர்களும் யோகா வகுப்பை நடத்தலாம்.

**66. மாணவர்களுக்கான பாடஇணைச்செயல்பாடுகள் (Co-curricular activities) யாவை ?**

அ) நாட்டுப்புறக்கலைகள் (Folk arts)

ஆ) மரபு விளையாட்டுகள் ( Indigenous Games)

இ) மன்றச் செயல்பாடுகள் (Club Activities)

இவற்றின் உட்பிரிவுகள் பொதுவழிகாட்டுதல் கையேட்டில் விளக்கமாகத் தரப்பட்டுள்ளன.

**67. ஒரு மாணவன் எத்தனை பாட இணைச் செயல்பாடுகளைச் (Co-curricular activities) செய்தல் வேண்டும் ?**

பல செயல்பாடுகளில் ஈடுபட்டிருந்தாலும், அவற்றுள் சிறப்பான ஒன்றனை மட்டும் மதிப்பிட்டால் போதுமானது.

**68. பாட இணைச்செயல்பாட்டை(Co-curricular activities) எதன் அடிப்படையில் மதிப்பீடு செய்வது ?**

பாட இணைச்செயல்பாட்டை ஆர்வம், தான்தொடங்காற்றல், விடாமுயற்சி, ஈடுபாடு, ஒழுங்குமுறை ஆகியவற்றை மனத்திற்கொண்டு மதிப்பீடு செய்தல் வேண்டும்.

**69. பாட இணைச்செயல்பாட்டை(Co-curricular activities) யார் மதிப்பீடு செய்தல் வேண்டும் ?**

மற்றப் பாட ஆசிரியர்களுடன் கலந்தாய்ந்து வகுப்பாசிரியர் இம்மதிப்பீட்டினைச் செய்தல் வேண்டும்.

**70. பாட இணைச்செயல்பாட்டை (Co-curricular activities) எப்பொழுது மதிப்பீடு செய்வது ?**

பாட இணைச்செயல்பாட்டைப் பருவம் முழுவதும் மாணவர் பங்கேற்கும் ஒவ்வொரு நிகழ்வையும் உற்றுநோக்கி மதிப்பீடு செய்தல் வேண்டும்.

**71. பாட இணைச் செயல்பாடுகளில் (Co-curricular activities) மாணவர்களின் ஆர்வம் எப்போதும் ஒரே நிலையில் இருக்குமா ?**

இருக்காது. ஆனால், மாணவர்கள் விரும்பும் செயல்பாடுகளில் ஈடுபடுத்தினால் அச்செயல்பாட்டை முடிக்கும்வரை ஆர்வத்துடன் இருப்பர்.

## மாற்றுத் திறனாளர்களுக்கான(Differently Abled) மதிப்பீட்டுமுறை

**72. மாற்றுத் திறனாளர்களுக்கு (Differently Abled) வளரறி மதிப்பீடு (அ) (FA(a)) மற்றும் (ஆ) (FA(b)) வை மதிப்பீடு செய்வது எவ்வாறு ?**

மாற்றுத்திறனாளர்களால் செய்யவியலும் செயல்பாடுகளை மட்டுமே வழங்குதல் வேண்டும். அவர்களின் ஆர்வம், விருப்பம், தேவை, நாட்டம்சார்ந்த செயல்பாடுகளை ஆசிரியர் கண்டறிந்து வழங்கிச் செயல்பாடுகளை மேற்கொள்ளுதல் வேண்டும். பொது மாணவர்களுக்கு வழங்கும் செயல்பாடுகளை வழங்குதல் கூடாது.

**73. உடற்கல்வியில் (Physical Education) மாற்றுத்திறனாளர்களை(Differently Abled) எவ்வாறு ஈடுபடுத்தலாம் ?**

மாற்றுத்திறனாளரின் உடல், மன நிலைகளுக்கேற்ப, அவர்களால் செய்யவியலும் உடற்பயிற்சிகள் மற்றும் உள்–வெளி விளையாட்டுகளிலும் ஈடுபடுத்தலாம். ஆனால், அவர்கள் விரும்பும் விளையாட்டுகளுக்கு முன்னுரிமை அளித்தல் வேண்டும். அவர்கள் விரும்பாதனவற்றை அவர்களின்மேல் திணித்தல் கூடாது.

**74. உடற்கல்வி (Physical Education) தரநிலை (Grade) மதிப்பீட்டுப் படிவத்தில் பொது/மாற்று எனக் குறிப்பிட்டுள்ளதற்குப் பொருள் என்ன ?**

பொது என்பது இயல்பான மாணவர்களையும், மாற்று என்பது மாற்றுத்திறனாளரையும் குறிக்கும்.

## மதிப்பெண்களும் தரநிலையும் (Marks and Grade)

**75. வளரறி மதிப்பீடு (அ) (FA(a))வுக்கு மதிப்பெண் வழங்கும்போது, பொது வழிகாட்டுதல் கையேட்டில் கொடுக்கப்பட்டுள்ள அளவீடுகளின்படிதான் மதிப்பெண் வழங்குவதா ?**

ஆம். தன்னார்வம் (Initiative), பங்கேற்றல் (Participation), ஒழுங்குமுறை (Regularity), படைப்பாற்றல் திறன் (Creative effort) ஆகியவற்றை மனத்திற்கொண்டு, விளக்கக்குறியீடுகளின் (Descriptors) அடிப்படையில் செயல்பாடுகளுக்கு மதிப்பெண்கள் வழங்குதல் வேண்டும்.

**76. தனித்திறன் பெற்ற மாணவர்தாம் வளரறி மதிப்பீடு (அ) (FA(a))வில் அதிக மதிப்பெண்கள் / தரக்குறியீடுகள் பெற இயலுமா ?**

அப்படியொன்றுமில்லை. பிற மாணவர்களும் அவர்கள் திறனுக்கேற்ப அதிக மதிப்பெண்கள் / தரக்குறியீடுகள் பெற வாய்ப்புள்ளது.

**77. ஒரு மாணவரிடம் ஏதேனும் தனித்திறமை (Special Skill) காணப்பட்டால், அம்மாணவருக்கு எல்லாச் செயல்பாடுகளிலும் மதிப்பெண் வழங்கலாமா ?**

வழங்குதல் கூடாது. ஒரு மாணவரிடம் ஒரு தனித்திறமை காணப்பட்டால் (எ.கா) பாடுதல், ஓவியம் வரைதல்) அந்தத் திறன் சார்ந்த செயல்பாடுகளில் அவருக்கு உரிய மதிப்பெண் மட்டுமே வழங்குதல் வேண்டும். பிற செயல்பாடுகளில் அம் மாணவனின் திறனைப் பொருத்து அதற்கேற்பத் தரநிலை வழங்கலாம்.

**78. குழு விவாதம் (Group Discussion) செய்யும்போது ( குழு செயல்பாடு) குழுவிலுள்ள எல்லா மாணவர்களுக்கும் ஒரே மதிப்பெண் தான் வழங்குதல் வேண்டுமா ?**

ஆம். ஏனெனில், குழுவுக்கான மதிப்பீடே தவிர, தனியொருவரைக் குழுவில் மதிப்பிடுதல் கூடாது. (குழுவில் ஒருவர் செயல்படவில்லையென்றாலும் அவரும் அக்குழுவைச் சார்ந்தவர் என்பதனால் அக்குழுவுக்குரிய மதிப்பெண் வழங்குவதே முறை.) குழுவைச் சுழற்சிமுறையில் இயங்கச் செய்தல் வேண்டும். குழுவில் மிகவும் சிறப்பாகச் செயல்பட்டவரை ஊக்குவிக்கப் பாராட்டலாம்.

**79. வளரறி மதிப்பீடு (அ) (FA(a)செயல்பாட்டில் ஈடுபாடு காட்டாத மாணவனை மதிப்பிடுவது எவ்வாறு ?**

செயல்பாடு என்பது கற்றல் தேவைக்கானது. ஆகவே, அச்செயல்பாடானது, மாணவர்களை ஈர்ப்பதாகவும் விரும்புவதாகவும் ஊக்குவிப்பதாகவும் கற்றலை மேம்படுத்துவதாகவும் ஆசிரியர் அமைக்கும்போது, ஈடுபாடில்லாத மாணவரும் அச்செயல்பாட்டில் ஈடுபடுவர். ஆசிரியர், மாணவர்கள் செயல்பாட்டில் ஈடுபடுமாறு வடிவமைக்கும் திறனைப் பெற்றிருத்தல் இன்றியமையாதது.

**80. ஒவ்வொருவகை வளரறி மதிப்பீடு (அ) (FA(a))வுக்கான மதிப்பீட்டு விளக்கக் கூறுகள் மிக நீளமாக இருப்பதனால் பதிவேட்டில் பதிவதற்கு இடம் மிகுதியாகத் தேவைப்படுகிறது. மேலும், பதிவேட்டை நிரப்புவதற்கான நேரமும் கூடுதலாகிறது. இதனைத் தவிர்க்க வழியுண்டா ?**

வழியுண்டு. சுருக்கக் குறியீடுகளைக் கையாளலாம்.

**81. எல்லாப் பாடங்களுக்குமான மதிப்பீட்டு விளக்கக் கூறுகளைத் (Descriptors) தொகுத்து ஆசிரியர்களுக்குத் தனியாக வழங்க இயலுமா ?**

பொதுவழிகாட்டுதல் கையேடுகள் மற்றும் பாடவாரியாக ஆசிரியர் கையேடுகள் பள்ளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றைப் பார்வையிட்டுக் குறித்துக்கொள்ளவோ நகலெடுத்து வைத்துக்கொள்ளவோ வேண்டும்.

**82. கல்வி இணைச்செயல்பாடுகளை (Co-scholastic) எவ்வாறு மதிப்பீடு செய்வது ?**

கல்வி இணைச்செயல்பாடுகளை மாணவர்களின் கல்வி மற்றும் பிற செயல்பாடுகளை உற்றுநோக்குதல் வாயிலாகவும், உடன்பணியாற்றும் பாடஆசிரியர்களிடம் கலந்து ஆலோசனை செய்தும் மதிப்பீடு செய்யலாம்.

**83. கல்வி இணைச்செயல்பாடுகளுக்கு (Co-scholastic) எப்போது தரநிலை வழங்குதல் வேண்டும் ?**

மாணவர்களின் கல்வி இணைச் செயல்பாடுகளைத் தொடர்ந்து உற்றுநோக்குதலின் அடிப்படையில் ஒவ்வொரு பருவத்தின் இறுதியிலும் தரநிலை வழங்குதல் வேண்டும்.

**84. கல்வி இணைச்செயல்பாடுகளில் (Co-scholastic) சிறந்து விளங்குவதனால், அம்மாணவருக்குக் கல்விசார் (Scholastic) செயல்பாடுகளில் கூடுதல் மதிப்பெண் வழங்கலாமா ?**

அவ்வாறு வழங்குதல் மாணவனைத் திசைதிருப்பிவிடும். ஆகையால், கூடுதல் மதிப்பெண் வழங்குதல் கூடாது. கல்வி இணைச்செயல்பாடுகளில் சிறந்து விளங்கும் மாணவனைக் கல்விசார் செயல்பாடுகளில் சிறப்புப்பெற வழிகாட்டுதலும் விழிப்புணர்வும் ஆர்வமும் ஊக்கமும் வழிகாட்டிக் கற்பிப்பதும் ஆசிரியரின் தலையாய கடமையாகும்.

**85. ஒரு மாணவர் கல்வி இணைச்செயல்பாடுகளில் (Co-Scholastic) மிகவும் சிறந்து விளங்குகிறார். ஆனால், கல்விசார் (Scholastic)செயல்பாடுகளில் தேவையான அளவுக்குக் கவனம் செலுத்துவதில்லை. அவரை மதிப்பிடுவது எவ்வாறு ?**

கல்விசார் செயல்பாடுகளில் தேவையான அளவுக்குக் கவனம் செலுத்த ஆசிரியர் மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல் வேண்டும். செயல்பாடுகள் மாணவர்களை ஈர்க்கும்படியாகவும் ஆர்வமூட்டக்கூடியதாகவும் ஊக்கப்படுத்தக்கூடியதாகவும் எளிய செலவிலாததாகவும் தருதல் வேண்டும். இத்தகைய நிலையில் மாணவர்கள் தங்கள் கவனத்தை உறுதியாகச் செலுத்துவார்கள்.

**86. கல்வி இணைச்செயல்பாட்டில் (Co-scholastic) ஒரு மாணவர் முதற்பருவத்தில் 'A' தரநிலையும், இரண்டாம் பருவத்தில் 'B' தரநிலையும், மூன்றாம் பருவத்தில் 'B' தரநிலையும் பெற்றால், ஒட்டுமொத்தத் தரநிலையைக் கணக்கிடுவது எவ்வாறு ?**

மூன்று பருவத்திலும் அம்மாணவர் பெற்ற தரப்புள்ளிகளின் கூட்டுத்தொகையை மூன்றால் வகுத்துச் சராசரி காணுதல் வேண்டும்.

எ.கா. பருவம் 1 = **A** = 5 தரப்புள்ளி

பருவம் 2 = **B** = 4 தரப்புள்ளி

பருவம் 3 = **B** = 4 தரப்புள்ளி

முப்பருவத்தின் கூடுதல் = 5 + 4 + 4 = 13

சராசரி=13/3 = 4.33

ஆகவே, அம்மாணவனுக்கான ஒட்டுமொத்தத் தரநிலை **B** ஆகும்.

## தரநிலை வழங்குவதற்கான அட்டவணை

| சராசரித் தரப்புள்ளி | தரநிலை |
|---|---|
| **4.5 – 5** | **A** |
| **3.5 – 4.4** | **B** |

| | |
|---|---|
| 2.5 – 3.4 | C |
| 1.5 – 2.4 | D |
| 1 – 1.4 | E |

**87. என்னால் முடியும், நான் செய்தேன் (I Can, I did Record) பதிவேட்டினை நிரப்புவது யார்? பேணுவது யார்?**

இப்பதிவேட்டினை மாணவர்களே நிரப்புவார்கள். ஆசிரியர் பார்வையிட்டுக் குறிப்புகளை மட்டும் எழுதுவார். இரண்டாம் பருவத்திலிருந்து பாடநூலிலேயே இணைக்கப்படுவதனால் பதிவேட்டுத்தாளைப் பேணும் நிலை ஏற்படாது. முதலிரண்டு வகுப்பு மாணவர்களுக்கும் இப்பதிவேட்டினை ஆசிரியரே நிரப்புவார்.

முதல் வகுப்புமுதல் நான்காம் வகுப்புவரை எளிய செயல்வழிக் கற்றல் (SABL) அடைவுத்திறன் அட்டவணை போன்று நிரப்புதல் வேண்டும்.

**88. வளரறி மதிப்பீடு (ஆ) (FA(b)) மதிப்பெண்ணுக்குக் குறியீடுகளை மாணவனின் கற்றல் செயல்பாடுகளுக்கான பதிவேட்டில் ஆசிரியர் குறித்தல் வேண்டுமா?**

குறியீடுகள் வழங்கத் தேவையில்லை. சிறந்த நான்கு கற்றலடைவுச் சிறு மதிப்பீட்டுக்கான மதிப்பெண்களை ஆசிரியர் பதிந்தால் போதும். அவற்றுள் இரண்டு உயர்மதிப்பெண்களை மதிப்பீட்டுக்கு எடுத்துக்கொள்ளுதல் வேண்டும்.

**89. மாணவர் திரள் பதிவேடு (Student Cumulative Record) ஆண்டுக்கொருமுறை வழங்கப்படுமா?**

ஆம். ஒவ்வோராண்டும் மாணவர்களுக்குத் தனித்தனியாக மாணவர் திரள் பதிவேடு வழங்கப்படும். இதில் மூன்று பருவங்களுக்குரிய தரநிலைகள் பதிவு செய்யும் வகையில் அமைந்திருக்கும்.

**90. ஏழை மாணவர்களால் புகைப்படம் எடுத்துத் தன்விவரப் பட்டியலில்(Student Cumulative Record) ஒட்ட இயலுமா?**

இயலும். இயலாத மாணவர்களுக்கு அரசு வழங்கும் பள்ளிநிதியைக் கொண்டோ புரவலர் திட்டத்தின்கீழோ தன்னார்வலர்கள் வாயிலாகவோ புகைப்படம் எடுக்க தலைமையாசிரியர் முயற்சி மேற்கொள்ளுதல் வேண்டும்.

**91. அனைத்து மாணவர்களாலும் குருதிவகையைக் (Blood Group) கண்டறிந்து கூறவியலுமா ?**

இயலும். எவ்வாறெனில், பள்ளியில் மருத்துவமுகாம் நடைபெறும்போது, மாணவர்களின் குருதிவகையைக் கண்டறிந்து பதிவேட்டில் பதிந்துகொள்வது தலைமையாசிரியரின் தலையாய கடமையாகும்.

**92. மதிப்பீட்டுப் படிவங்கள் (Evaluation Formats) வழங்கப்படுமா ?**

www.tnscert.org இணையத்தளத்திலிருந்து மதிப்பீட்டுப் படிவங்களைத் தற்போதைக்குப் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

**93. தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டைப்பற்றி மாணவர்களுடைய பெற்றோருக்குத் தெரிவித்தல் வேண்டுமா ?**

தெரிவித்தல் வேண்டு. பள்ளித் தலைமையாசிரியர், பள்ளி முதல்வர்/தாளாளர் விழிப்புணர்வு ஏற்படுத்த உரிய நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும்.

**94. தொகுத்தறி மதிப்பீட்டில் (Summative Assessment) ஒரு மாணவன் ‘E2’ தரநிலைப் பெற்றால் என்ன செய்வது ?**

இத்தரநிலை பெற வாய்ப்பில்லை. ஏனெனில், தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டில் கற்றலைத் தொடர்ந்து மதிப்பீடு செய்யப்படுவதனால், அனைத்துக் குழந்தைகளும் D தரநிலைக்கு மேல் பெற்றிடுவர்.

## வகுப்பறை மேலாண்மை (Classroom Management)

**95. மாணவர் எண்ணிக்கை மிகுதியாக இருக்கும்பொழுது வளரறி மதிப்பீட்டை மேற்கொள்வது எவ்வாறு ?**

வகுப்பு முழுமைக்குமான செயல்பாட்டை வழங்கலாம். சான்றாகச் சொல்வதெழுதுதல், பட்டிமன்றம், கருத்தாடல், படித்தல், படம் வரைதல், பாடுதல், பேசுதல், குழுக்களாகப் பிரித்துச் செயல்பாடுகளை அமைத்தல் என ஆசிரியரின் திறனுக்கும் பட்டறிவுக்கும் ஏற்பவும் மாணவர்தம் செயல்திறனுக்கு ஏற்பவும் செயல்பாடுகளை வடிவமைக்கலாம்.

**96. பல்வகுப்புக் கற்பித்தலின்போது (Multigrade Teaching) குழுச் செயல்பாடுகளை மதிப்பிடுவது எவ்வாறு ?**

பல்வகுப்புக் கற்பித்தலின்போது, ஒத்த கருத்துடைய பாடப்பொருளுக்கு ஏற்ற குழுச் செயல்பாடுகளை வடிவமைத்துக் கொடுத்து மதிப்பீடு செய்தல் வேண்டும்.

**97. தொடர் மற்றும் முழுமையான (CCE) மதிப்பீட்டுமுறையில் ஒரு பாடவேளைக்கான நேரம் எவ்வளவு ?**

நடைமுறையில் உள்ள பாடவேளை நேரத்தையும், சூழலுக்கேற்பவும் பின்பற்றுதல் வேண்டும்.

**98. பாடத்திட்டம் (Lesson Plan) எழுதுவது எவ்வாறு ?**

தற்பொழுது நடைமுறையில் உள்ள பாடத்திட்டம் எழுதுவதனைப் போன்றே எழுதுதல் வேண்டும். பாடத்திட்டத்தில் கற்றல்–கற்பித்தல் செயல்பாடுகளில் வளரறி மதிப்பீடு (அ) செயல்பாடுகளையும் வளரறி மதிப்பீடு (ஆ) எழுத்து/வாய்மொழித் தேர்வையும் திட்டமிட்டு வடிவமைத்தல் வேண்டும்.

**99. எளிய செயல்வழிக் கற்றல் (SABL), எளிய படைப்பாற்றல் கல்வி (SALM), படைப்பாற்றல் கல்வி (ALM) ஆகியவற்றைப் பின்பற்றிக் கற்பிப்பதா, கற்பிக்கவேண்டாவா ?**

இவையனைத்தும் கற்பித்தல் முறைகள். ஆனால், தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு என்பது, ஒருவகை மதிப்பீட்டுமுறையாகும். அனைத்துக் கற்பித்தல் முறைகளிலும் தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டை மேற்கொள்ளலாம்.

**100. ஆசிரியர் தொடர்விடுப்பில் (மருத்துவ விடுப்பு (Medical Leave), மகப்பேறு விடுப்பு (Maternity Leave) செல்லும்போது, அவர்தம் வகுப்பிலுள்ள மாணவர்களை மதிப்பீட்டுக்கு உட்படுத்துவது எவ்வாறு ?**

பள்ளித் தலைமையாசிரியர், மாற்றாசிரியர் அல்லது பெற்றோர் ஆசிரியர் கழகம் வாயிலாக ஆசிரியர்களைப் பணியேற்கச் செய்து கற்பித்தலை மேற்கொள்ளலாம். அவர்கள் மாணவர்களை மதிப்பிடுவார்கள்.